தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 || சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆவணி 13 (29-8-'59). சனிக்கிழமை || இதழ் 11

முப்பது கோடி மக்களின் முழுமைக்கும் ஒரு சமுதாயத்தை அமைக்கப் புறப்பட்டோர், அன்னர்!

ஒப்பிலாத பாரதத்தை உருவாக்கி அதில் "நாமெலாம் ஒன்று!" என்று ஒற்றுமைக் கொடியைத் தூக்கிக் காட்ட வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்டோர் அன்னர்.

"ஆயிரம் உண்டிங்கு சாதி! எனினும் அடித்துக்கொள்ளோம்; உறவை முறித்துக்கொள்ளோம்! எல்லோரும் ஒரு குலம்! காங்கிரசே எங்கள் குருகுலம்!" என்று பாடிக் காட்டியோர் அன்னர்.

"எங்களின் உள்ளம் தியாகப் பிழம்பு! நாட்டு விடுதலையும் நம்மவரின் நல்வாழ்வுமே எங்கள் குறிக்கோள்! போட்டியிடோம் பதவிக்கு! புரட்சி செய்யோம், அடுத்தவருக்குப் பதவி கிடைத்து விட்டதே என்று!" என்று அறநெறி உரைத்தனர்.

"செய்த தியாகத்திற்கு விலையாக, சிந்திய குருதிக்குக் கூலியாக, பதவியிலையேல் போர்க்கொடி உயர்த்தி, புகைச்சலைப் பெரிதாக்கி, பதவி நாற்காலியை உருட்டிவிடோம்! நாங்கள் சத்திய நெறியில் செல்லும் சுத்த வீரர்கள்!" என்றும் வாய் கிழியக் கத்தியிருக்கின்றனர். இத்துணையும் நாம் நடை முறையில் கண்டவை; கேட்டவை.

சொல்வதற்கும் கேட்பதற்கும் இனிமையான கருத்துக்கள் இவை. நாட்டில் பல்லாயிரம் மக்கள் நம்பவும் செய்தனர், இந்த நாச்சுழலை! "வாக்கில் உள்ள தூய்மையை நெஞ்சிலும் கொண்டு வாழ்ந்திடுவர்; பாரத மண்ணில் சீரதிகம் கொழிக்க உழைத்திடுவர்" என்றெல்லாம் மக்கள் எண்ணி அவர்கள் சொற்படிக் கேட்டனர். ஆண்டு பன்னிரண்டு உருண்டோடிவிட்டது. அந்தச் சொற்களும் அத்தோடு உருண்டோடி விட்டன. காற்றில் கலந்துவிட்டன வாக்குறுதிகள் என்பதோடு, கதை முடிந்துவிடவில்லை. கழுத்துக்கள் அறுபட்டன; கைகள் முறிக்கப்பட்டன; நாற்காலிகள் உருட்டப்பட்டன என்ற சேதிகளும் எதிரொலிக்கின்றன.

நாட்டுக்குச் சேவை செய்யப் புறப்பட்டோரிடையே ஏற்பட்ட பதவிப் போட்டி ஊழல்கள் நாற்றத்தைக் கிளப்பிவிட்டிருக்கின்றன.

நாளுக்கு நாள் போட்டிச் சண்டைகள் பெருகுகின்றன. நாட்டு நிர்வாகம் குலைக்கப்படுகிறது.

மைசூரில்...... அனுமந்தையாவின் ஆட்சி சில நாள்; நிசலிங்கப்பாவின் நிர்வாகம் சில நாள்; அடுத்து "ஜட்டி" வந்திருக்கிறார்; இனி எந்த "ஜாக்கெட்" வருமோ - அறியோம் பாரதமே!

பஞ்சாபிலே...பிரதாப்சிங் கெய்ரானுக்கும் கியான்சிங் ரேர்வாலாவுக்கும் இடையே பெரும் அடிபிடி! கியான்சிங்கைக் கீழே தள்ள, அவரை ஊழல் எனும் குற்றக் கூண்டில் நிறுத்துகிறார் கெய்ரான். கெய்ரானைக் கீழே வீழ்த்த, அவர் மகன் கள்ளக் கடத்தல்காரன் - கொள்ளைக்காரன் என்கிறார் கியான்சிங்!

பிரகாசத்தின் ஆட்சியில் ஒளி இல்லை என்றனர்; ஓமந்தூரார் வந்தார். உதவவில்லை தமக்கு எனச் சிலர் ஓட்டிவிட்டனர். இராசபாளையத்தார் வந்தார். அவர் வரலாறும் அந்த வழியே! இது சென்னை கண்ட வரலாறு.

பம்பாயிலே, மந்திரிசபை பலமுறை மாற்றி அமைக்கப்பட்டது; சாவு நோக்கிச் செல்லும் மாநிலக் காங்கிரசுக்குக் கடைசியாய்க் கிடைத்த சாவானும் சவக்குழிக்குத் தள்ளப் படுகிறார்!

கேரளத்தில் காங்கிரசார் அமைத்த அமைச்சரவைகளும் நீடிக்கவில்லை!

அசாம் காட்டுவிலங்கு வேட்டைக்கு மட்டும் பெயர்பெற்றதன்று. காங்கிரசாரின் பதவி வேட்டைக்கும் பெயர் பெற்றது. அதற்கு ஒரே சான்று, அங்கிருந்து விரட்டப்பட்டு இங்கே "கவர்னர்" ராய் வந்து கிடக்கும் மேதி அவர்கள்!

இப்படி ஆண்டுதோறும் நடக்கும் இழுபறி சண்டைகளின் உச்சக்கட்டமாய் இப்போது ஒரு புதுக்குரல் கிளம்பியிருக்கிறது.

"எதிர்பார்க்கப்பட்ட அளவு இம்முதலமைச்சரின் ஆட்சியில் திறன் இல்லை.

ஆட்சி படிப்படியாகத் தரங் குறைந்ததாவதோடு, திறமைக் குறைவையும் பிரதிபலிக்கிறது. குறிப்பாக மாநிலத்தின் சட்டமும் ஒழுங்கும் சரியாகப் பராமரிக்கப் படவில்லை! நாட்டுப்புறங்களில் பாதுகாப்பு என்ற நம்பிக்கை அற்றுப்போயிற்று!

வேண்டாத செலவுகள் பெருகுகின்றன; கருவூலம் வற்றுகிறது!

முதலமைச்சர் ஆட்சியைத் தெளிவாகக் கவனிப்பதில்லை! ஆட்சியின் பல துறைகளிலும் ஊழல்கள் பெருகுவதைக் கண்டும் கண்டிக்கத் திறனற்றுப் போய் விட்டார்! மாநிலத்தின் பொருள் வளர்ச்சி சிதைக்கப்பட்டு விட்டது. அதை உடனே சீர்திருத்த, ஆட்சியில் மாற்றம் கண்டாக வேண்டும்!

அப்பொழுதுதான் மக்கள் மனதிலிருந்து சரியும் நம்பிக்கையை நிலைநிறுத்தி வைக்கமுடியும்!

இவற்றிற்காகக்கூட முதலமைச்சரைப் பதவியை விட்டு நீங்கச் சொல்லவில்லை, நாங்கள். இதைவிட முக்கியமான அடிப்படை இது! இன்று இங்கு நடப்பது காங்கிரசின் ஆட்சிகூட அன்று; காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொள்ளும் ஒரு குறிப்பிட்ட கும்பலின் ஆட்சியே!

— 8-ம் பக்கம் —

பாரதம் எங்கும் சோதரர் போர்!

தொல்காப்பியச்சுவை!

11. அகத்தில் அரிவையர்.

அகத்தில் அரிவையர் என்றவுடனே "உள்ளத்தில் பெண்கள் எப்படி இருக்கவேண்டும்?" என்றே, "வீட்டில் பெண்கள் எப்படி இருக்கவேண்டும்?" என்றே எண்ண முனைவோர் உண்டு. ஆனால் இவையெல்லாம் தனது அகத்திணைத் தொடர்பால் அழகுற, ஆழமாகப் படமிட்டுக் காட்டுகிறார் பெரும்புலவர் தொல்காப்பியனார். பெண்களைப் பேசாத புலவர்கள் பிறக்கவேண்டும். அத்தகைய மெல்லியலார் இல்லாத இல்லங்கள் உயிரற்ற உடலங்களையே ஒக்கும். அம்மெல்லியலார் இயல்பினைச் சற்று விளக்கமாகத் தொல்காப்பியரை ஒட்டி அறிதலும் இன்றைய மக்களின் கடமையல்லவா?

பெண்ணின் பெருமையெலாம் அவர்தம் அழகு நலன்களில் அமைந்துவிடுகின்றன. அவ் அழகு யாது? "நாள்தோறும் மணிக்கணக்கில் கண்ணாடிமுன் நின்று முகம் திருத்துதலா? முடிதிருத்துதலா? இரட்டைப் பின்னலா? கண்ணாடி போன்ற கவின்மிகு உடையிலா?" என்றால் "இல்லை!" என்பதே தொல்காப்பியர் கருத்து. அரிவையர் அறிவுடையவர்கள் - ஆற்றலுடையவர்கள் - கருதியது முடிக்கும் கடமையுணர்வு கொண்டவர்கள் என்ற கருத்துடையவர், ஆசிரியர்.

அறிவு மேம்பட்டவரால்தான் குறிப்பு மூலம் கருத்தைக் காணமுடியும். தலைவன் - தலைவி முதற் சந்திப்பிலேயே தலைவியின் சிறந்த அறிவாற்றலை அவள் கண்கள் தெளிவுறுத்துகின்றன.

"நாட்டம் இரண்டும்
அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும்
குறிப்புரை யாகும்."

(தொல். இளம்-93)

அத்தகைய அறிவாற்றல் அமைந்த பெண் எத்தகைய இலக்கணத்துடன் உலவவேண்டும் என்ற வினாவிற்கு விடையாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

"அச்சமும் நாணும்
மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்
குரிய என்ப."

(தொல்-94)

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம்' என்ற பாரதியின் சொல்லைப் பயன்படுத்திப் படுகுழியில் வீழக்கூடாது. பெண்ணின் பெருமையே அவள் பேணும் அச்சத்திலும், நாணத்திலும், மடனிலும் நிச்சயம் உண்டு என்பார் தொல்காப்பியர். அதற்காக அச்சம் எல்லாவற்றிலும் வேண்டும் என்பதில்லை - அஞ்சத் தக்கனவற்றின்கண் அஞ்சுதலும், நாணத்தையே அழகாகக் கொண்டமையால் நாணுதலும், மடன் பிறப்பியல்பு என்பதால் மடனும் பெண்கட்கு வேண்டும்.

பெண்களின் சிறப்பு எங்கே தொடங்கி எங்கே முடிகின்றது என்ற வினாவிற்குக் கலித்தொகை 9-ஆம் பாடல் விடை தருகின்றது. மூன்று வேறுபட்ட உவமைகளைக் கொண்டு ஒரே கருத்தை வலியுறுத்துகின்றார் கவிஞர். சந்தனமரம் மலையிலே தோன்றி-வளர்ந்து - முற்றி மரமாகின்றது. ஆனால் அதன் பயனைப் பெறுவது மலையன்று. அதனை அரைத்துப் பூசும் மாந்தர் ஆவர். கடலிலே முத்துச் சிப்பிகளில் முத்து உருவாகும். ஆழ்கடலின் அடியில் தோன்றிய முத்தால் கடலுக்குப் பயன் இல்லை - அதனை எடுத்து அணியும் மகளிரால் அம்முத்து பெருமையுறும். யாழிலே எழு நரம்புகள் இறுகப் பிணைக்கபபட்டிருந்தும் அதன் பயன் இசையை எழுப்புவார்க்கே பயன்படுகிறது இவை மூன்றிலும் உள்ள பொருள்கள் தமக்குப் பயன்படாமல், தொடர்பற்ற பிறருக்கே பயன்படுவதால் பெருமை அடைகின்றது.

அதுபோல், பெண் பிறந்த வீட்டில் இருப்பதால் பெருமை இல்லை வானளாவிய மாடமாளிகைகளில் பிறந்திருக்கலாம். புறப்படுதற்குப் புதுப் புதுக் 'கார்'களிருக்கலாம்-சுவைமிகு உணவுகள்-எடுபிடி வேலையாட்கள் பலப்பல இருக்கலாம். ஆனால் அவையா அவளுக்கும், அவளைப் பெற்றோருக்கும் பெருமைதரும்? இல்லை, அவள் புகுவதற்கு இருக்கும் கணவன் பெரும் செல்வனாக இல்லை என்பதோ அவனிடத்திலே 'கார்' இல்லை என்பதோ குறி இல்லை; அவளுக்கு அவனிடத்தில் அவன் இதயத்தில் அழியா இடம் உண்டு என்பதே பெருமை அளிக்கும்

அவ்வாறு மனம் ஒன்றுபட்ட இருவர் மகிழ்வுடன் இல்லறம் நடத்துதற்குச் சில வழிகளைத் தொல்காப்பியர் கூறுகிறார்.

"சொல்லெதிர் மொழிதல்
அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி
அவள் வயினான"

(தொல்-108)

தலைவன் கூறுவன அனைத்திற்கும் எதிர்ப்புக் காட்டிக் குரல் எழுப்பக் கூடாது என்ற முதல் தடை, சற்றுக் கடுமைதான். பெண்கள் ஆண்களின் உள்ளத்தை அடக்கும் கருவிகள் என்றால் மிகையில்லை. எனவே தலைவியின் விருப்பத்தை விஞ்சித் தலைவன் எச்செயலையும் என்றைக்கும் செய்தல் இல்லை. எனவே அவன் மேற்கொண்டு கூறும் சொல்லை ஏற்று வாழ்வியலை நடாத்துதல் நல்ல முறையாகும் என்கிறார்.

பெண்கள் பேசுதலே அவர்கள் பெருமைக்கு இழுக்கு என்பது சங்க கால மக்கள் கருத்துப் போலும். களவுக் காலத்திலே தலைவி-தலைவன் இருவரிடமும் உள்ள உறவு தொடங்குகிறது தலைவன் பல செய்திகளைத் தலைவியிடம் கூறுவான். தலைவிக்கு உள்ளததே பல கூற வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். அவன்பால் வேட்கையும் ஏற்படும். ஆனால் வாய்விட்டுக் கூற அவள் மனம் இடந்தராது என்கிறார். வாய்விட்டுக் கூறாவிட்டால் அவள் மெய்ப்பாட்டிலிருந்து,முகத்திலிருந்து அவள் குறிப்பினை அறியமுடியும் என்கிறார் ஆசிரியர்.

"தன்னுறு வேட்கை
கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக்
கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின்
அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும்
உணர்விற் றென்ப"

(தொல் 116.)

மண்குடத்திலே ஊற்றி வைக்கப் பட்ட நீர் வெளியிலிருப்போருக்குப் புலனாகாது. ஆனால் அந்நீர்க் கசிவால் உள்ளே நீர் உண்டு என்பதை அறியலாம். அதுபோல் தலைவி பேசாவிட்டாலும் அவள் மெய்ப்பாடு கொண்டு அவள் உள்ளத்தை அறியமுடியும் என்கிறார்.

இதனின்று பெண்கள் பேசாவிட்டால் பெருமைதான் பெறுகிறார்கள் என்பதும், பேசிவிட்டால் பெருமையைத்தான் வளர்க்கிறார்கள் என்பதும் உண்மை என்று அறியலாம்.

தலைவன் படிப்பிற்கோ - பொருளீட்டவோ மனையகம் விட்டுப் பிற நாடு செல்லும்போது அவனுக்குத் தடையாகத் தலைவி அமையக் கூடாது என்பதோடு, அவனுக்கு அன்பான சில சொல்லிச் செய்வினை முடித்து விரைவில் மீள்க என்றும் கூற வேண்டும்.

தலைவி பேசாமல் இருப்பதே சிறப்பு என்றதால், பேசாமலேயிருந்து விட்டால் அதனாலும் அல்லல்கள் தோன்றும். எனவே எதற்கெடுத்தாலும் எதிர்ப்பு இல்லாமல் பேச வேண்டிய துறைகளில் பேசிச் செயலாற்ற வேண்டியவர்கள் பெண்கள். தலைவி பேசாமல் மாறுபாடுடன் நடந்துகொண்டிருந்தால் தலைவன் போக்கும் வேறு பக்கம் புகுந்து விடும் அதனால் தலைவி அவன் குறிப்பை அறிய இல்லாத சில சொல்லி உண்மையை அறியலாம் என்கிறார் தொல்காப்பியர்.

"அவன்குறிப் பறிதல்
வேண்டியுங் கிழவி
அகமலி யூடல்
அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி
தோற்றவும் பெறுமே"

(தொல்-157.)

அத்தகைய அரிய இயல்புடைய தலைவிக்கு வேண்டிய ஆறு குணங்களை முன்னரே கூறி இருக்கிறோம். அவள் பெருமையுணர்ந்த தலைவன் காமத்துள் பணிவுடனும், பிற வேளைகளில் அன்புடனும் இருப்பான் என்பதை அறிதல் வேண்டும். அறிந்த அரிவையர் அவர் தம் தலைவர்களை வழிபடுதல் - பணிதல் அவர்களின் இயல்பு என்பதை 158 ஆம் சூத்திரத்துள் கூறுகிறார்.

இவ்வரிய இயல்புகளை உடைய தலைவியர் இயல்பு—

"அருண் முந் துறுத்த
அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல்
கிழவோட் குரித்தே"

ஆகும். கண்டவுடனே அருள் உள்ளத்தை முகமும், அன்புப் பண்பைச் சொல்லும் கூறுதல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

பெருமையும் உரனும் உடைய ஆண்கட்குப் பெருந் துணையாவார் அவர் தம் பெண்டிர். ஏன் இவ்வியல்பு கூறப் பெற்றது? தலைவனுக்கு ஏற்படும் இன்ப-துன்பத்தில் ஏற்ற பங்கினைப் பெறுவதாலன்றோ இயம்பப் பட்டது. தலைவன் துயர்ப்படும்போது தாய்போல அன்பு மொழி கூறி ஆற்றுப்படுத்தலும்; மயங்கிய வேளை நண்பனைப்போல் நயமொழி கூறி நல்வழிப்படுத்தலும்; கலங்கிய வேளை காதலியைப்போல் கனிமொழி கூறிக் களிப்படையச் செய்தலும் தலைவியின் கடமையாகும் என்கிறார் ஆசிரியர்.

"தாய்போற் கழறித்
தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும்
உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய
காலை யான"

(தொல்-171.)

இத்தகைய பேராற்றலும், பெரும் புகழும் தமதாகக் கொண்டவர்கள் பெண்கள். அவர்கள் இவ்வளவு பெருமையுடையோம் என்று மனச் செருக்குக் கொள்ளக்கூடாது. "என்னாலல்லவா இது நடந்தது?" என்று எடுத்தது அனைத்திற்கும் கூறக்கூடாது. அவை சொல்லாமல் விளங்கும். எனவே எக்காரணம்பற்றியும் தலைவன் முன் தலைவி தன்னைப் புகழ்ந்து கூறவே கூடாது என்பது அவர் கருத்து.

"தற்புகழ் கிளவி
கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும்
கிழத்திக் கில்லை"

(தொல்-178.)

எனவே எல்லா வகையாலும் ஒல்காப் பெரும் புகழையுடைய அரிவையர் எல்லாச் சிறப்பும் உடையவராய்த் திகழ மேற்கண்ட வழிமுறைகள் வாய்ப்பளிக்கும் என்றே தொல்காப்பியர் இவைகளை எடுத்தியம்பியுள்ளார். அவை தம்மைப் பேணுவதால் அரிவையரும் - அவர் தம் வீடும் பொலிவுறும். வீடுகள் பொலிவுற்றால் நாடு வளமுறும். நம் நாடு விடுதலை பெறுதற்கும் வளமுறுதற்கும் அரிவையர் தொண்டே இனி வேண்டப்பெறும் ஒன்றாகும். அத்தகைய நன்னாளை அரிவையர் பெற்றுத் தர விழைவோமாக.

-இராம. இராமநாதன்
பி. ஏ. (ஆனர்சு.)

★

அடுத்த கிழமை —
தொல்காப்பியத்தில் ...
"மரபியலின் பொது இயல்பு"

காண்க!

அடுத்த இதழ் வழக்கம்போல் பன்னிரண்டு பக்கங்களோடு வரும்.

★

திருத்தம்

இந்த இதழ் நான்காம் பக்கம், தலைப்பில், "இந்திராவுக்குப் பணம் கிடைத்தது; முந்திராவுக்குப் பதவி கிடைத்தது!" என்றிருப்பது, "இந்திராவுக்குப் பதவி கிடைத்தது; முந்திராவுக்குப் பணம் கிடைத்தது!" என்றிருக்க வேண்டும்.

இந்த இதழ், கவியரங்கக் கவிதையில், ஆறாவது வரி, "பேரவைக்கு வந்தோரே!..." என்றும், எட்டாவது வரியின் கடைசி, "ஆடவர்காள்!" என்றும் இருத்தல் வேண்டும். (மற்றுமுள அச்சுப்பிழைகளை மன்னிக்க.)

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 29—8—'59 | இதழ் 11

பாண்டித் தேர்தலில்...

காமராசரின் முகம் இப்போது ஒளி சிந்துகிறதாம். நகராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பின் இருண்டுகிடந்த அவரது கமலமுகம் இப்போது மலர்ந்து விரிந்து மணம் கொட்டுகிறதாம்! காங்கிரசுக்காரர்களின் வாயெல்லாம் பல்லாய்த் தெரிகிறதாம்! ஆகா, எத்துணை பெரிய வெற்றி! பாண்டியில் காங்கிரசுக்கொடி ஏறிவிட்டதாம்! தமிழகமெங்கும் நகராட்சி மன்றங்களில் மண்ணைத் தின்றவர்கள் வாயில் இப்போது சருக்கரை விழுந்துவிட்டதாம். என்ன ஆனந்த நடனம் ஆடுகிறார்கள், தெரியுமா?

அவர்களது ஆனந்தக் கூத்துக்குப் பின்னே பின்னிக்கிடக்கும் பேருண்மையை மறந்துவிட்டனரோ? உண்மைகள் பலவற்றை போதிக்கும் அந்த முடிவைக் கண்டு, நாம் சில சிக்கலான பிரச்னைகளை யறியக் கடமைப் பட்டிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் வெற்றிபெற வேண்டுமென்பதற்காகத் தேர்தலில் நிற்பதில்லை. வெற்றி கிட்டினாலும் தோல்வி வந்தாலும் தி. மு. கழகம் தான் உலகுக்கு அறைய வேண்டிய உண்மையைக் கூறத் தவறாது. தனது கழகத்தின் கோட்பாடுகளை வலியுறுத்துவதற்காகவே அது தேர்தலில் போட்டியிடுகிறது

பாண்டிச்சேரியும் அதன் பகுதிகளும் பலகாலமாகவே மாற்றார் பிடியில் பட்டுழல்கின்றன. பிரஞ்சுக்காரர்களின் வெறிக்கூத்திற்குப் பலியாகிச் சிதைவுண்டு கிடந்தது அந்த மண். அழகும் ஆற்றலும் கொழித்துக்கொண்டிருந்த அந்த இடம் பிரஞ்சுக்காரர்களின் ஆட்சியில் வேதனையும் குழப்பமும் விளையாடும் மண்ணாகிவிட்டது. வெறியர்களும் மோசடிக்காரர்களும் அங்கே ஆட்சியைக் கைப்பற்றி வெறி கொண்டாடினர். அந்த நிலைமை மாற, தி. மு. கழகமும் விழைந்தது; விடுதலைப் போராட்டத்திற்குத் துணையும் நின்றது! போராட்டத்தின் முடிவு, வேறாகிவிட்டது. சிங்கத்திற்குத் தப்பியவன் முதலையின் வாயில் விழுந்த கதையாய்விட்டது. பிரஞ்சுப் பிடியிலிருந்து விடுபட்டவன், தில்லியின் வலையில் வீழ்ந்துவிட்டான். நம்மைப் பொறுத்து, பிரஞ்சுக்காரன் எந்த அளவு மாற்றானோ, அந்த அளவு மாற்றான்தான் தில்லிக்காரனும். இனவழி ஒன்றுபட்டால்தான் நல்வாழ்வு தழைக்கும். இந்தக் கொள்கையில் நம்பிக்கையுள்ள நாம், புதுவையும் தாயகத்துடன் இணைந்து, தனித் திராவிடம் காண்பதற்கு வழிகாட்ட வேண்டுமெனக் கருதினோம்; அதனை வலியுறுத்தினோம். மக்கள் பெருமளவு இன்னும் நம் கொள்கையை உணரும் காலம் வரவில்லை; அல்லது நாம், புதுவை மக்களில் பெரும்பாலோர்க்கு இன்னும் நம் கருத்தை உணர்த்தும் வலிவு பெறவில்லை. அதனால் பாண்டிச்சேரி வாக்காளர்களில் ஒன்பதாயிரம் பேருடைய வாக்குகளைத்தான் நாம் பெற முடிந்திருக்கிறது. அதனால் பிறர் நம்முடைய குரலை மதிக்கவில்லை என்றில்லை பொருள். நம் குரல் பெரிதும் மதிக்கப்படுவதற்கு இடையூறாகப் பல தீய நெறிகள் வந்துள்ளன.

ஒன்று : பாண்டித் தேர்தல் மிக அமைதியான முறையில் நடப்பதற்கான வழி வகைகளை-சூழ்நிலைகளை அங்குள்ள காவல் துறையினர் உருவாக்கித் தரவில்லை. **வேண்டுமென்றே நமது தொண்டர்கள் பலர் தேர்தலுக்கு முன் சிறையில் தள்ளப்பட்டனர்; நொறுக்கப்பட்டனர்.** இந்த முறையால் நாம் நமது கருத்தை எடுத்துச் சொல்கையில் அதனை மக்கள் கேட்பதற்கு அமைதியான வாய்ப்பில்லை. கேட்ட மக்களும் தம் சிந்தனையைச் செயல்படுத்த வழியில்லை. எனவேதான் நமது கழகத்தின் வெற்றி அங்கே தடைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதற்கே போட்டியிட்டோம்.

தில்லிக்கு நாம் அடிமைகளல்ல என்பதைக் காட்டவே நாம் போட்டியிட்டோம்.

காவல் துறையினர் தலையிட்டாலும் காங்கிரசார் பொய்ப் பிரச்சாரம் செய்ததாலும் நம் குரல் உயரவில்லை; அது தடுக்கப்பட்டு இருக்கிறது.

இன்று இதுவே தேர்தல் முடிவாகலாம்; ஆனால் போராட்ட முடிவு இன்னும் வரவில்லை. சிங்க மறவரின் அணிவகுப்புச் சிதையவில்லை; புத்துரம் பெற்றிருக்கிறது; புதிய பாடம் கற்றிருக்கிறது. இன்றில்லாவிடினும் நாளையாகிலும் வெற்றி நம்மைத் தழுவத்தான் போகிறது; அவமானத்தைக் கழுவத்தான் போகிறது. ★

"அமுதசுரபி"யின் தலையங்கம் :

நா காக்க!

"அண்மையில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மகாநாடொன்று சென்னையில் நடைபெற்றது. அவ்விழாவில் அறிஞர்கள் இருவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டிக் கேடயம் வழங்கினார்கள். தீர்மானங்கள் பலவும் நிறைவேறின. உற்சாகமூட்டும் இந்தக் கூட்டத்தில் பயனுள்ள கருத்துக் கோவை நடக்கும் என எதிர்பார்த்துத் தமிழன்பர்கள் பலர் கூடியிருந்தனர். தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படும் முடிவுகள் ஏற்படும் என்ற நம்பிக்கை அவர்களிடமிருந்தது.

ஆனால் 'தமிழ் உரைநடை' என்ற பொருள்பற்றி அந்தக் கூட்டத்தில் எழுந்த விவாத அரங்கு வெறும் 'பழி' சுமத்தும் பகுதியாகவும், 'நானே பெரியவன்' என்ற மார் தட்டும் காட்சியாகவும் மாறி, தனிப்பட்ட முறையில் பெயர் குறிப்பிட்டுத் தாக்குமளவுக்குச் சோக நாடகமாகிவிட்டபோது தமிழன்பர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்தை எழுதமுடியாது.

'சொல்லேருழவ'ரின் சிற்பியை வள்ளுவர் புகழ்ந்திருக்கிறார். எழுத்துலகச் சிற்பிகளிடமிருந்து தமிழகம் எவ்வளவோ எதிர்நோக்குகிறது. உரை நடை வளர்ச்சி குறித்து முடிவு செய்யப்பட வேண்டியவை ஏராளமாக உள்ளன. சிறு கதை எழுதுவதொன்றே தமிழுக்குச் செய்யும் தொண்டு என்று சிலர் எண்ணுகின்றனர்; சிறுகதை, புதினம் எழுதத் தெரிந்தவரே 'எழுத்தாளர்' எனப்படுவோர் என்ற மயக்கமும் இல்லாதில்லை. ஆனால், வளரும் உலக மொழிகளோடு தமிழும் முன்னிற்க வேண்டுமானால் எழுத்துத் துறையில் நடக்க வேண்டிய ஆக்க வேலைகள் பல உண்டு. வரலாறு, தொல்கலை நூல், பொறி இயல், உடற்கூறு சாத்திரம் இவையனைத்தும் வளர மொழி உதவுகிறது; அந்த உதவியினால் நாடு வளர்கிறது; மக்கள் பயனடைகின்றனர். அதற்குத் தெளிவான, இணக்கமான உழைப்பு மிகத் தேவை. அதை விட்டுவிட்டு, 'இவர் எழுதுவது நடையா?' என்று வீண் காலம் போக்குவதில் யாது பயனும் இல்லை.

ஒவ்வொருவர் எழுத்தும் ஒவ்வொரு விதம்; நீண்ட வாக்கியங்களாக எழுதுபவர்கள்; நேரிடையாகக் கூற வேண்டியதைச் சுற்றி வளைத்துக் கூறுபவர்கள்; ஆங்கிலத்தில் நினைத்து அந்த மரபுப்படி தமிழில் எழுதுபவர்கள் என்று 'நடை' அழகைச் சிறப்பித்தவர்களைப் பலவிதமாகப் பிரிக்கலாம். இப்படித்தான் எழுத வேண்டும் என்று எவரும் சட்டம் விதிக்கமுடியாது. இயற்கை அருவிக்குப் பாதை வகுப்போர் எவர்?

தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலக்கலாமா கூடாதா என்பது குறித்துக் கருத்து வேற்றுமை உண்டு.

அந்த விவாதத்தில் இப்போது நாம் இறங்க விரும்பவில்லை. எழுத்தாளர் மாநாட்டில் எழுந்த விவாதம் இவைபற்றி எத்தகைய உருப்படியான முடிவும் கூறாமல், **தமிழ் அறிஞர் மறைமலை அடிகள் எழுதியது தமிழா என்று ஆராயப் புகுந்தது தான் வேதனையை அளிக்கிறது. மறைமலை அடிகளது கருத்துக்களில் மாறுபாடு கொண்டவர்கள்கூட அவரது தமிழ்த் தொண்டையும், அவரது இலக்கியப் படைப்புகளையும் போற்றித் தலை வணங்காது இரார்.** 'மக்கள் நூறுண்டு வாழ்க்கை' போன்ற நூல்கள் மூலம் கடினமான பொருள்களையும் தூய தமிழில் படைக்கலாம் என்று நிலைநாட்டிய பெரியார் அவர். சங்கராச்சாரியரும் மறைமலை அடிகளாரின் சாகுந்தலம் நாடகத் தமிழாக்கத்தைப் பாராட்டி யிருக்கிறார்கள்.

இந்நிலையில் புத்தம் புதிய அறிவு நூல்களைத் தமிழில் சொல்லும் திறமையை வளர்க்கத் திட்டம் தீட்ட வேண்டிய எழுத்தாளர்கள், 'அவருக்கு என்ன தெரியும்? இவர் எழுதுவது தமிழா? நானும் இன்னொருவரும் மட்டுமே இலக்கியம் வளர்க்கிறோம்' என்று புகைப்படலம் எழுப்ப முற்பட்டதனால் தமிழுக்கு நஷ்டமில்லை, அந்தச் 'சிருட்டி'கர்த்தர்களுக்கே நஷ்டமென்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

ஒருவரது எழுத்தை மதிப்பிடுவது காலம். சிறந்ததென மதிப்பிடப் போவது வரப் போகும் தலைமுறை. கால வெள்ளத்தில் நீந்தி, பயனுடன் நிற்க வேண்டிய வாழும் எழுத்தாளர்களைக் காலம் போற்றிப் புகழும்.

உரை நடை வளத்தால் தமிழை வளர்க்கத் திட்டம் தீட்டியிருக்கலாம்; முன்னோடியாக வழிவகைகள் கூறியிருக்கலாம். ஆனால் ஏன் சொல்லேருழவரின் செயல், எண்ணம் இப்படியாகிவிட்டதென்பதுதான் புரியவில்லை!

சொல்லேருழவர்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை விட்டுப் பயன்தரும் ஆராய்ச்சியிலும் அது காட்டும் முடிவிலும் இறங்க வேண்டும்.

சொல்லேருழவருக்கு எண்ணுவதை அஞ்சாது எடுத்துச் சொல்ல உரிமையுண்டென்றாலும் சூழ்நிலை, அவை மதிப்பு, அதனால் ஏற்படும் பலன் இவை அறிந்து 'நா காக்க' வேண்டிய பொறுப்பு இருக்கிறதென்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

—"அமுதசுரபி", 1-8-'59.

ஆகா, சுதந்திரம்!

வந்த சுதந்தரம் மனம் நொந்த மக்களுக்குத் தந்ததென்ன?
மலாயாக் கணபதிக்குச் சுதந்தரம் தந்த பாதுகாப்பென்ன?
கடன் வாங்கியும் பட்டினியா? மணம் செய்தும் தனிவாழ்வா?
இந்திராவுக்குப் பணம் கிடைத்தது; முந்திராவுக்குப் பதவி கிடைத்தது!

ஏழையர்க்கு என்ன கிடைத்தது?

இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலை விழாவுக்குரிய நாளென நம்பப்படும் ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியைப் புதுடில்லி ஆட்சியினரும், அவர் தம் ஆணைக்கு அடங்கும் மாநில சர்க்காரிலே உள்ள மந்திரிகளும், மந்திரிகளுக்குப் பராக்குக் கூறுவதே பாரதமாதாவின் பாத பூசையென எண்ணியிருக்கும் காங்கிரஸ் கட்சியினரும் பதின்மூன்றும் தடவையாக இந்த ஆண்டும் கொண்டாடியிருக்கிறார்கள். விடுதலைத் திருநாளாக இருக்க வேண்டிய சுதந்திர நாள் மக்களின் தொடர்பை விட்டு நெடுந் தூரம் விலகிவிட்டது. இதை விழா சோபையிழந்து சுவையிழந்து போய்விட்டதை வைத்தே முடிவு செய்துவிடலாம். தாயகத்தின் விடுதலை வேண்டி இமயம் முதல் குமரி முனை வரை பணி புரிந்தவர்கள் தேசிய விடுதலைப் படையிலேயிருந்தார்கள். அவர்களிலே பலர் இன்றைய தினம் விடுதலை விழாவிலே இடம் பெறவில்லை. தேசிய இயக்கத்தின் பெருமையைச் சொல்லி, காந்தியாரின் பெயரை நினைவூட்டிக் கொண்டே தங்களின் பதவி பீடங்களைப் பலப்படுத்திக்கொள்கிறார்களே தவிர, பல்வேறு இன மக்களின் இதய வேட்கையினை விடுதலை விழாவுக்குச் சொந்தக்காரர்களெனச் சொல்லிக் கொள்வோர் சிறிதளவும் உணர்ந்து கொள்ளத் தவறிவிட்டனர். சுதந்திரத்தின் சோபிதங்களையெல்லாம் சொல்லி இங்கேயுள்ள அத்தனை மக்களையும் ஒரே அணியில் திரட்டிவிடும் திராணியும் தெம்பும் தேசியத் தலைவர்கள் எவருக்குமில்லை. காங்கிரஸ் இடிந்து போன கோட்டை. விடுதலை பெறவும் புது வாழ்வு மலரவும் வீர சுதந்திரம் வேண்டி நின்றவர்களிலே பலரும் இன்று வாய்ச் சொல் வீரர்களாக, நேருவைக் கண்டு அஞ்சி அஞ்சிச் சாகும் அடிமைகளாக இருக்கிறார்கள். சொந்த நாட்டையும் சொந்த மொழியையும் சொந்த இலக்கியத்தையும் சொந்தக் கலையையும் சொந்தக் கலாச்சாரத்தையும், சொந்தப் பாங்கினையும், சொந்தப் பண்பையும், மறந்துவிட்டவர்கள் தான் ஏகபாரதம் என்ற வலையிலே வீழ்ந்துள்ளார்கள்! புதிய விடுதலையும் புதிய வாழ்வும் புதிய அரசும் தேவையென விரும்புவோர் இவர்களுடைய பழைய பட்டியலிலே மீண்டும் இடம் பெற மறுத்துவிட்டார்கள்! நாற்பது கோடி மக்களுக்கொரு சுதந்திரம்; அதன் வாயிலாக ஒரு குடியரசு; அந்தக் குடியரசு தான் மொழி உணர்வை—இனப்பற்றை மதித்து நடக்கும் நல்லவர்களை, தனது ஆட்சியாளர்களாகப் பெற்றுள்ளது என்றால் எல்லோருமே மகிழ்வார்கள். ஆனால் நாம் பெற்றது விடுதலை அல்ல என்ற உணர்வை 1947-ம் ஆண்டிலேயே உணர்ந்தவர்கள், மீண்டும் விடுதலைப் போர் துவக்க வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம் என்ற உண்மையைத் தெரிந்தவர்கள், போலிச் சுதந்திர கீதத்திலே தங்களது இதயத்தைப் பறி கொடுத்துவிடவில்லை! ஆனந்தப் பண்ணும், களிப்பு நடனமும் காட்டியவர்கள், ஆடுவோம் பாடுவோம் என்றார்கள்; வெற்றி யெட்டுத்திக்கு மெட்டக் கொட்டுமுரசே என்றார்கள்! முரசு ஒலித்ததா என்றால், இல்லை! தேசிய முழக்கம் விடுதலை உணர்வைத் தீர்த்துவிட்டதா என்றால் இல்லவே இல்லை! துணைக்கண்டத்தின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அங்கே சொந்த இனம், பிறந்த தாயகம் என்ற இலட்சிய உரிமையை வேண்டுபவர்கள்தான் தம் வலிவையெல்லாம் ஒருமுகமாக்கித் திரட்டி நின்று வருங்காலச் சுதந்திரத்திற்காக எல்லா வகையான துன்பங்களையும் தாங்கத் துடிக்கிறார்கள்! இந்தக் குமுறுகின்ற உள்ளங்களிலேதான் சுதந்திரத்தைப் பேசி அவர்களின் ஆசைகளைத் தகர்த்துவிட இந்த ஆண்டும் மூவர்ணத்தினர் முயன்றனர்!

இந்தியத் துணைக்கண்டத்தின் சுதந்திரம் செழித்துவிட்டதென்றால், காங்கிரஸ் கட்சியினர் தவிர ஏனையோர் இதனைப் பெரிதாக மதிக்கவில்லையே – ஏன்? தேசிய இயக்கம் பொதுமக்களின் இயக்கமென்றால் அதனால்தான் விடுதலை விழா நடைபெறுகிறதென்றால், சர்க்கார்களுக்கு வரிப்பணம் செலுத்துகின்ற அத்தனை பேர்களின் பெயரிலும் நடைபெறும் சர்க்காரும், அவர்தம் கட்சியினரும் பொதுமக்களைப் பிரித்துவிட்டது ஏன்? மக்களின் எண்ணமும் விழைவும் ஆசைகளும் தான் சுதந்திரத்தின் சின்னங்கள் என்று ஆன்றோரும் ஒப்புக்கொள்ளும்போது, ஒரு சில குறிப்பிட்ட இலட்சியங்களுக்கு அப்பாற்பட்டவர்களின் இதயத்தைக் கவராத இந்திய சுதந்திரம் யாருக்காக? நலிந்து மெலிந்தோரும், வாழமுடியாதவர்களும் பெற்ற சுதந்திரத்தின் பெருமையால் இன்னும் தங்களுக்குள்ள சிறுமைகளைச் சீர்செயது கொள்ள வசதியும் வாய்ப்பும் இல்லையென்றால் இந்தச் சுதந்திரத்தின் பொருள் என்ன? இதனாலேதான் உலகத்திலே இந்தியாவின் புகழ் பெருகிவிட்டதென்றால் இந்திய மக்களின் தாயகமாக, பாரதம் உருவாகாதது ஏன்? "நீ வேறு. நான் வேறு. உன் மொழி என்னை ஆளக்கூடா"தென்ற நினைவுகள் சாதாரண மக்களின் இதயங்களிலே இடம் பெற முடியாமல் அந்தப் பாரதப் பண்பு பக்குவம் பெறுததும் ஏன்? இதனைப் புதுக் காங்கிரஸ்காரர்கள், கொடிகளைத் தூக்கியெறிந்துவிட்டுப் பர்மிட்டுகளை ஏந்தித் திரிகின்றவர்கள் எண்ணிப் பார்த்தால் இந்தச் சுதந்திரம் யாராலோ பெறப்பட்டு எவருக்கோ தரப்பட்டுவிட்டதென்ற உண்மையினைப் புரிந்துகொள்ள முடியும்! சுதந்திர நாட்டின் தலைவர் எனப்படும் குடியரசுத் தந்தை ஆகஸ்ட் 15-ஐப் பாராட்டிச் சொல்லியிருக்கும் பொன்மொழிகள் ஒன்றுவது இந்த உண்மைகளை மறுக்கவில்லை. குடியரசுத் தலைவர், துணைக்கண்ட மக்களின் பொதுச் சொத்தல்ல; ஒரே ஒரு கட்சியினரின் வணக்கத்துக்குரிய ஆண்டவனாகி விட்டார்! காங்கிரஸ், சர்க்காருக்குத் தாளம் தட்டும் போக்கிலேதான் இவருடைய செயல்கள் அமைகின்றனவே தவிர, மக்களின் தேவைகளைத் தெரிந்து கொண்டவராக இந்தியக் குடியரசுத் தலைவரும் பாரதத்தின் தந்தையுமான டாக்டர் அவர்களின் பேச்சு அமையவில்லை! "நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றைத் தீர்ப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் தேசிய வளங்கள் எல்லாவற்றையும் ஒன்றுதிரட்ட வேண்டும்" என்பது குடியரசுத் தலைவரின் சுதந்திரதினச் செய்தியில் முதல் வாசகம்! "காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறு கட்சியினரும் இங்கேயிருக்கிறார்கள்; அவர்களுடைய நெறிகளும், நெறியினைக் காக்கும் முறைகளும் வேறு!" என்ற அரசியல் நிலையை உணர்ந்திருப்பின் அனைவரையும் ஒன்றாக நினைத்து அழைத்திருக்கமாட்டார்! புதுடில்லி மந்திரிகள் சொன்னபடிச் செயல்படுகின்ற குடியரசுத் தலைவர் தேசியவளங்களைத் திரட்டவேண்டும் என்பது மக்களுடைய கடமை என நினைவூட்டுகிறார்! இவருடைய ஆசீர்வாதமபெற்றுள்ள சர்க்காரை பெரும்பகுதி மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத்தான் குடியரசுத் தலைவர் முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும்; அதன் பிறகுதான் ஆய்வுரைகள்!

இந்தியத் துணைக் கண்டத்தில் பண்டிதர்களின் ஆட்சி இருக்கும் போது, பாபு போன்றவர்கள் குடியரசுத் தலைவர்களாக இருக்கும் போது, சிக்கல்கள் ஏற்படுவது ஏன்? உலகத்துக்கெல்லாம் சுற்றுப் பயணம் செய்து போதனைகள் தருகின்ற மகான்களும் மேதைகளும், சர்வபள்ளிகளைப் போன்ற தத்துவ ஞானிகளும் எட்டுத் திக்கிலும் புகழ்ப் பரப்பும் தூதுவர்களும் இருக்கும்போது, "சிக்கல்களைத் தீர்க்கமுடியவில்லை!" என்று சுதந்திர தினத்திலே சோக கீதம் பாடுவது ஏன்? காந்தியாரின் சீடர்களைத் தவிர வேறு எவரும் இந்த நாட்டின் வாழ்வுப் பிரச்னைகளிலே தலையிட உரிமையற்றவர்கள் என்று எண்ணியிருக்கும் ஆட்சி பீடத்தவர்களும் அவர் தம்குடியரசுத் தலைவரும் ஆண்டிற்கோர் முறை மக்களைப் பார்த்து இப்படியெல்லாம் "சிக்கலைத் தீர்க்க வாருங்கள்! சிந்தனையில்-செயலில்-நாட்டு நலனை முதன்மையாகக் கொள்க" என்று ஆய்வுரைகள் தருகிறார்கள்! பன்னிரண்டு ஆண்டு ஆட்சியினைப் பெரிதாக மதித்துப் புகழ்ந்து பேசுகிறவர்கள், தங்களது சாதனைகளைக் கண்டு உலகம் வியக்கிறது என உரக்கச் சொல்கிறவர்கள், அவர்களின் அரும் பெருந்தலைவர்ராசேந்திரபிரசாத்தெரிவிக்கிறார்கள் "இன்னல்கள்-இடையூறுகளைக் கண்டு கலங்காதிருக்க வேண்டு"மென்று! ஆளும் வாய்ப்புப் பெற்ற காங்கிரஸ் கட்சியினர் மக்களின் இடையூறுகளைத் தீர்க்கவில்லையென்றால் மக்களின் தந்தையெனத் தவறாக மதிக்கப்பட்டு வரும் குடியரசுத் தலைவர் காங்கிரஸ் மந்திரிகளுக்குப் புத்தி சொல்ல வேண்டுமே தவிர, அவர்களின் வக்கீலாக நின்று மக்கள் மன்றத்திலே வாதாடக்கூடாது! காங்கிரஸ் கட்சியினர் தம்மைக் குடியரசுத் தலைவர் ஆக்கியவர்கள் என்ற காரணத்துக்காக அவர் கண்டிக்க முன்வரமாட்டார் என்பதுமட்டுமல்ல; அவர்களின் கட்டளைக்குத் தலை வணங்குவதையே தன் கடமையாகவும் கொண்டுவிட்டார்! இந்தியக் குடிகளின் தலைவரென்றால் காங்கிரஸ் கட்சிக்கும் அப்பாற்பட்டவராகவே இருக்க வேண்டும். பொது மக்களுக்குப் போதனை புரிகின்ற மகான்-சன்னிதானம் என்பதும் உண்மையென்றால் தென் கோடியைப்பற்றிப் பேசவும் வேண்டும்! சர்க்காரின் புதிய திட்டங்களைப்பற்றிப் பேசுவதற்கு காங்கிரஸ் மந்திரிகள் இருக்கிறார்கள்! குடியரசுத் தலைவரின் பணி இதுவல்ல! ஆதிக்க வெறி பிடித்த வடவர் தம் ஆட்சிக் குழு தங்களின் ஆசைகளைத் தலைவர் தெரிந்து

— 6-ம் பக்கம் —

"தென்றல்"
தினசரியாகிறது!
பெரிய அளவில் வருகிறது!
நவம்பர் முதல் தேதி
எதிர்பாருங்கள்!
வார இதழ் வழக்கம்போல வரும்!
பிறவிவரங்களை வரும் 12-9-'59 இதழில் காண்க!

காரைக்குடிக் கவியரங்கம்

குறள் நெறிக் குடும்பம்

3. மக்கள்.

நற்றமிழ்க்குக் கவிதைகளை, நாட்டிற்காக
நலம்வளர்க்கும் குழந்தைகளை அடுத்தடுத்துப்
பெற்றெடுக்கும் பேறுடையாய்! கண்ணதாசப்
பெயருடையாய்! கவியரங்கத் தந்தாய்! வாழ்க!
பெற்றோர்க்குப் பெருமைதரப் பிறந்துமுந்திப்
பேரவைக்கு வந்தோரே! கருவிருந்து
கற்றுணர்ந்து பெற்றெடுத்த கவிக்குழந்தை
கையேந்தி வந்திருக்கும் ஆடவர்கள்!

கணவரிலா மனைவியில்லை மனைவியின்றேல்
கணவனெனப் பெயரில்லை அதனைப்போலே
குணம்நிறைந்த மக்களின்றேல் குடும்பமில்லை;
குறள்நெறியும் வளர்வதில்லை உலகவாழ்வில்
இணையில்லாப் பெருஞ்செல்வம் பணியாள்நண்பன்
எடைபோடும் உறவினர்க்கும் இடமேஇல்லை!
துணையிலேன் குழந்தையிலேன் தனியன்என்பான்
சோர்வினைத்தன் துணைக்கொள்வான், துயர்பிறக்கும்!

என்றுபல நினைத்தபடி எழுதுதற்கோர்
ஏடெடுத்தேன் எழுதுங்கோல் தொடுவதன்முன்
நின்றிருந்த என்குழந்தை மடியைச்சுட்டி
இடங்கேட்டாள், தடுப்பதற்கு முன்னமர்ந்தாள்!
சென்றிருந்த என்மகனும் ஓடிவந்தென்
நெடுந்தோளை அணைசேர்த்தான்! மனைவிதானும்
நன்றிதுகாண் மக்களினை என்பால்விட்டு
நாள்தோறும் கற்பனையில் உலவுவீரேல்,

குடும்பமினி நடப்பதனைப் பார்ப்பேன்" என்றாள்!
கொடுஞ்சிறையில் பகைவரெலாம் பிடித்துநம்மை
அடைத்தாலும் வெளிவரலாம் குடும்பத்திற்குள்
அகப்பட்டால் வெளிவருதல் அரிதேயாகும்!
குடும்பத்தில் மனைவியவள் அரசியாவாள்;
குழந்தைகளோ வரிசையிலே சூழ்ந்துநிற்கும்
படையாவார்; தலைவனந்த ஆட்சிக்குள்ளே
பணிபுரிந்து வாழ்வுதரும் அடிமையாவான்!

எனநினைந்தேன் எழுதுகோல் தாளைஎல்லாம்
எடுத்துவைத்துச் சின்னேரம் வெளியிற்சென்று
நினைவினிலே கவியெழுதி வருவோமென்ற
நினைப்பினில்நான் நடைபோட்டேன்! இளமைப்போதில்
மனமொன்றிப் பழகியவன், உடன்படித்தோன்
மணமுடித்துப் பிரிந்திருந்தோன், எனதுநண்பன்
கனவினிலே வருவதுபோல் தெருவில்வந்தான்
காட்சியினை என்னென்று விளக்கிச்சொல்வேன்!

முன்னோடி வருங்குழந்தை மூன்று! பின்னே
முன்னேற்ற வாழ்வுற்ற நண்பன்தோளில்
சின்னீரே வாய்சிந்தும் குழந்தையொன்று!
சிறப்புடையான் கைப்பிடித்து நடந்துவந்த
தின்னொன்று! வேட்டியினைப் பற்றிவந்த
பெண்குழந்தை பிறிதொன்றிக் காட்சியைப்பார்த்
"தென்னேடா? தென்னைமரம் குலைகள்தாங்கித்
திருவீதி வலம்வருதல் போல வந்தாய்!

பிள்ளைகளில் ஒன்றிரண்டை மனைவிதானே
பிடித்துவரல் ஆகாதோ? தனியாய்நீயே
பிள்ளைகளைத் தூக்குவதோ?" என்றேன்நண்பன்
பெருஞ்சிரிப்பை உதிர்த்துப்பின் கையைக்காட்டித்
தள்ளாடி நடந்துவரும் மனைவிதன்னைத்
தனிப்பெருமை யுடன்சுட்டி சொன்னான்: "முன்பு
கள்ளவிழும் மலர்க்கூந்தல் அழகியாகக்
காதலித்து மணமுடித்த காலந்தன்னில்,

இல்லையென நான்புகழ்ந்த இடையிலேதான்
இருக்கின்ற சேய்க்குழந்தை பாராய்! இன்னும்
இல்லறத்தின் பயனாக ஆறுமாதம்
இப்போதும்" எனவுரைத்தான் "இல்லறத்தில்
சொல்லவொணாச் சுகம்பெரிதாய் நினைத்தோம்; இன்று
சுமைபெரிதாய்த் தோனுதப்பா!" எனச்சிரித்தான்!
நல்லவன்காண்! குழந்தைகளைத் தாங்குகின்றான்!!
நடுத்தெருவில் அலையவிடும் தீமைகாணான்!

சிந்தனையில் பொங்கியெழும் சிரிப்படக்கித்
திண்டாடும் நண்பனைநான் பார்த்துக்கொண்டே
எந்தவொரு 'நன்னாளில்' மணமுடித்தாய்?
எவ்வளவு காலந்தான் ஆயிற்றென்றேன்.
"அந்தவினா எதற்கப்பா? இங்கிருக்கும்
அழகுதவழ் குழந்தைகளை எண்ணிக்கொண்டால்
வந்திடுமே விடையென்றான்! எட்டாம்ஆண்டில்
வருகுழந்தை யோடெட்டாம் வாழ்வுபெற்றான்!

குழந்தைபெறல் குறைத்திடுக! கட்டுப்பாடாய்க்
குடும்பத்தை வளருமென ஆட்சிசெய்வோர்
வழங்குமொழி தனைஎதிர்க்க நினதுவீட்டில்
வளர்கின்ற தெதிர்க்கட்சி வாழ்கவென்றேன்!
"தழங்கருவி முத்துதிர்க்கும் தமிழநாட்டில்
தனிவளத்தால் நனிசிறக்கும் தமிழர்வீட்டில்
குழந்தைகளின் மழலைமொழி கூடாதென்றால்
குழலிசையும் யாழிசைபோல் மறைந்துபோகும்!

முழக்கமிடும் படைக்கஞ்சும் அரசும் உண்டு
முறைமையிலாப் பகைக்கஞ்சும் அரசும் உண்டு
குழப்பத்தைக் கண்டஞ்சும் அரசும் உண்டு
குழந்தைகளைக் கண்டஞ்சும் அரசும் இந்தப்
பழம்பெருமை பேசுகின்ற நாட்டிலுண்டு!
பயந்தவளின் வயிறெரியச் சாதி பேத
வழக்கன்றி வாழ்வறிபா, பெற்ற தாய்க்கே
வாழ்வழிய வழிதேடும் செய்கையுண்டு!

கடுகடுத்த முகத்தோடு பேசும் என்னைக்
கடுநோக்கால் சுட்டெரித்து நண்பன் சொன்னான்
"அடுத்தடுத்துப் பிள்ளைபெறல் தீமை என்றே
அனைவருக்கும் சொல்லுதற்கோர் ஆளைத் தேடிக்
குடும்பத்துக் கட்டுப்பாட் டதிகாரத்தைக்
கொடுத்துள்ளார் என்னிடத்தில் அறிகவென்றே!
எடுத்துரைத்தான் என்நண்பன் யாது செய்வேன்!
'இந்நாடும் உருப்படுமோ' எனச் சிரித்தேன்!

"உள்ளமிக நொந்தவன் போல் பேசுகின்றாய்
உம்கவிஞர் திரைப்படத்தில் தமிழாம் தேனை
அள்ளிமிக வழங்குபவர் 'தென்றலாக'
அடிக்கடியுன் மனங்கவரும் கவிஞர் தாமும்
'பிள்ளையொரு தொல்லை' யெனப் பேசினாரே!
பேசுகிறாய்"? எனவிரைந்து கடுகடுத்தான்!
கள்ளமிலா என்நண்பன் பதவி காத்தான்!
"கருத்தில்லாய்! சொல்வதுகேள்", எனத்தொடுத்தேன்!

தொல்லையெனத் தெரிந்தபினும் அந்தத் தொல்லை
தொடர்ந்துவர யாரேனும் விரும்புவாரோ!
நல்லதமிழ்க் கவிஞரவர் வீடு சென்று
நாடாளப் பிறந்துவளர்ந் தோங்குகின்ற
வெல்லமொழிக் குழந்தைகளின் வரிசை பாராய்!
விளங்குதமிழ் இலக்கியத்து நகைச்சுவைக்குச்
சொல்லியதை உணர்ந்திடுக, தொல்லையெல்லாம்
தூளாக்கும் குழந்தைமுகம் பேணி வாழ்க!

'பிரஞ்ச்'சென்னைய பிறநாட்டில் பிள்ளையொன்று
பெற்றெடுத்தால் மறுமாதம் பெற்றவர்க்கு
வருகின்ற சம்பளத்தில் பத்துக் கூடும்!
வளர்கின்ற குழந்தைகளுக் குதவியாகும்!
அரசமரம் சுற்றிவந்து பிள்ளைக்காக
அலைகின்ற நம்நாட்டில் பிள்ளை பெற்றால்
வரவினிலே ஒருபாதி கரைந்து போக
வறுமைபிணி கூடுதலாய் வளர்ந்து போகும்!

தாய்பிடிக்கத் தந்தையுடல் அரிந்து வைக்கத்
தானீன்ற குழந்தையினைத் தாய்சமைக்க
ஆய்வுசெயும் கடவுளர்தாம் அதனை உண்ண
ஆவலுடன் காட்சிதரல் கதையில் கேட்டோம்!
தாய்பிடிக்கத் தந்தையின்று குழந்தை தம்மைத்
தடங்கிணற்றில் தள்ளிவிடக் கடவுள் கண்டும்
ஆய்வுசெய வருவதில்லை! ஊரைக் காக்கும்
அவர்தாமே வருகின்றார், அழைத்துச் செல்ல!

— அடுத்த பக்கம் —

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

கொண்டால் தென்னாட்டிலே உள்ள மொழிப்பற்றை அலட்சியம் செய்து விட்டு விடுதலைப் போரிலே இடம் பெற்ற தென்னவர்களையெல்லாம் மறந்துவிட்டு, வள்ளுவர் படம் அஞ்சலில் அச்சிடப்பட வேண்டும் என்ற மிகச் சாதாரண உரிமை கலந்த வேண்டுகோளைக் கூட உதைத்துத் தள்ளுகின்ற ஊதாரிப் போக்கினையும் புரிந்துகொள்ளமுடியும்! இந்தி வெறியர்களின் செயல்களைப்பற்றியெல்லாம் யோசனைகள் சொல்லத் தயாராகாத குடியரசுத் தலைவர், "நாற்பது கோடி மக்களின் ஏகப் பிரதிநிதி நான்" என்பதை வெளியுலகத்தவர் கேட்டால் நகைத்துக்கேலி செய்வர்!

இந்தியத் துணைக்கண்டத்து சுதந்திர வாழ்வை எண்ணியெண்ணி வெளி நாட்டிலேயுள்ள இந்தியர்கள் பெருமைப்படுகிறார்களாம். குடியரசின் பெருமைகளைக் காக்கும் வகையில் நல்ல முறையில் நடந்துகொள்கிறார்களாம். இதனைக் கண்டு குடியரசுத் தலைவர் பெருமைப்படுகிறாராம். மகிழ்ச்சி அடைகிறாராம்! ராசேந்திரபிரசாத் போற்றுகின்ற சுதந்திரம் வந்த பிறகுதான், மலேயாவிலே நம்முடைய கணபதி-தமிழன் என்ற ஒரே காரணத்துக்காகத் தூக்கிலிடப்பட்டான்! தூக்கிலே தொங்கிய கணபதியை குடியரசுத் தலைவர்கள் காப்பாற்ற நினைக்கவில்லை. மாறாக மகிழ்ச்சி அடைகிறார்கள்! கணபதிக்குப் பிறகு வீரசேனன் என்றொரு தமிழன் சுட்டுக் கொல்லப்பட்டான். இந்திய சுதந்திரத்தின் காவலர் அன்றைய தினம் கண்ணீர் வடிக்கவில்லை. தமிழர் சமுதாயம்தான் தனி புதல்வனுக்காகத் துடித்துக் கலங்கியது! எந்த வடநாட்டுத் தலைவனுடைய நெஞ்சும் துடிக்கவில்லை. இதுபோலவே சிங்களத்து மண்ணைப் பொன்னாக்கியவர்கள் நம் தமிழர்கள். அவர்கள் படும் இன்னலை ஏனென்று கேட்கும் யோக்யதை சுதந்திர சர்க்காருக்கு இல்லை. சுற்றுப் பயணம் சென்ற பண்டித நேரு தமிழர் குறைகளைக் கேட்கத் தயாராக இல்லை என்றார்! தமிழர்களுடைய நலன்களைப் பாதுகாக்காத சர்க்காரின் தலைவர் பண்டாரநாயகா. அவருடைய விருந்திலே நேரு மகிழ்ந்தார்! தங்கையரின் புதல்வியரை நடனமாடவிட்டு வேடிக்கை கண்டார். தமிழர்களின் துயர் கேட்டுத் துன்பந் துடைக்கத் துணியவில்லை! இலங்கைத் தெருக்களில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது, கண்ணகி யினத்துக் காரிகையர் காலிகளால் அவமானப்படுத்தப்பட்ட போது, லண்டனிலே பண்டாரநாயகாவுக்கு விருந்து வைத்துப் பாராட்டுதல் தெரிவித்தார்! தேயிலைக் காடுகளில் ரத்தம் சொரிந்து பொன் குவிக்கும் தமிழர்களைத்தான் சிங்கள வெறியர்கள் இரையாக்கினார்கள்; தாக்குதலுக்குக் குறியாக்கிக் கொண்டார்கள்! தமிழகத்திலே இனப்பற்றுக் கொண்டோர் தங்கள் ஆதரவினைக் கூறி டில்லி பீடத்தவரே ஆவனசெய்வீர் எனக் கேட்டுக் கொண்டார்கள்! டில்லியிலேயிருக்கும் ஆதிக்க வெறியர்கள்தான் இன்றளவும் கண் திறக்கவில்லை கருணை பெறவில்லை. ஆனால் குடியரசுத் தலைவர் சொல்கிறார் வெளி நாட்டிலேயுள்ளவர்கள் இந்திய சுதந்திரத்தைக் கேட்டு இன்பம் கொண்டு மகிழ்கிறார்களாம் வடநாட்டு மார்வாடிகளும் பனியாக்களும் சிங்களத் தீவினைத் தேடிக் கூலிகளாகச் செல்வதில்லை. அதனாலேதான் குடியரசுத் தலைவருக்குத் தமிழர்கள் செத்துக்கொண்டிருக்கும் செய்திகள் செவிக்கின்பம் தருவனவாக இருக்கின்றன. அவருடைய குடியரசு-தமிழர்களை, வெளி நாட்டிலே வேதனைப்படுபவர்களை, வாழ்விக்க முடியாமல் வஞ்சக எண்ணத்திலே நடை போடுகிறார்கள். இதனை நாமெல்லாம் மறந்துவிடுவோம் என்ற மமதைப் போக்கிலேதான் குடியரசுத் தலைவர் எனப்படும் "காங்கிரஸ் ஏஜண்ட்" பேசுகிறார். தென்னகத்தவரை மறந்துவிட்டவர்களின் சுதந்திர ஆட்சியினைத் திணித்துவிட முயல்வது தவறுதான்!

இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிடியிலேயிருந்து விடுபட்டுவிட்டார்கள். விடுதலைப் பாதை நோக்கிப் பயணம் செய்கிறார்கள்! வங்கத்திலும் உத்தரப்பிரதேசத்திலும் காங்கிரஸ்காரர்களின் பதவிச் சண்டையைக் கேட்டு உலகம் சிரிக்கிறது! கண்ணீர் வடிக்கவேண்டிய குடியரசுத் தலைவரும் பிரதமரும் சுதந்திரதினத்துச் செய்திகளைத் தருகிறார்கள்! மராட்டியமும் குஜராத்தும் தங்கள் உரிமைகளை இன்னும் மறந்துவிடவில்லை. மாநிலக் குழுவினரின் தவறுகளை நீக்கத் துடிக்கிறார்கள்! மலைக்கு மலைப் போர்க்களங்களை உருவாக்கும் நாகர் விடுதலைக் கிளர்ச்சியை நசுக்கிவிட முடியவில்லை! பம்பாய்—ஆந்திரா - மைசூர் எல்லையோரங்களைப் பிரித்துக் கணக்கிடும் சிந்தனையும் செயலும் போற்றிப் புகழப்படும் சுதந்திரத்திற்கு இல்லை! பாரத சர்க்கார் பங்கப்பட்டு நிற்கிறது. தென்னாட்டிலேயிருக்கும் காங்கிரஸ்காரர்களிலே நல்லவர்கள் அந்தக் கட்சியினை விட்டு விலகிவிட்டார்கள்; புதிய கட்சிகளைத் தேடி ஓடிவிட்டார்கள்! மற்ற கட்சிக்காரர்கள் குறிப்பாகத் தொண்டர் படை திரட்டும் கம்யூனிஸ்ட்களும், சுதந்திர தினம் நடத்தித் தங்களின் கேரள சர்க்கார் சாகடிக்கப்பட்டதைச் சொல்லி கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால் கழகம் சொல்லுகின்ற வடவர் ஆதிக்கத்தை மட்டும் அவர்களாலே புரிந்து கொள்ள முடியவில்லை. 12 ஆண்டுகளுக்கு முன்னாலே வந்த சுதந்திர நாள் நமக்குச் சொன்ன வாக்குறுதிகள் இன்றளவும் நிறைவேறவில்லை. தாயகத்தின் தேவைகள் இனவாரியாக ஏற்றுக்கொள்ளப்படும் அதனையே முக்கிய கருவியாக வைத்துத்தான் சுதந்திர சர்க்கார் செயல்படும் என்றெல்லாம் சமாதானம் சொன்னார்கள். ஆனால் அத்தனையும் ஏமாற்றுச் சொற்கள் என்பதனைத் தெரிந்துகொண்டோம்! தென்னாட்டு மக்களின் சுதந்திர வாழ்வு இந்தி வெறியர்களின் ஆசைகளிலே இணைக்கப்பட்டு பலியாகி வருகின்றன. தென்னகம் டில்லியின் பிடியிலேயிருந்து விடுபட்டு வாழ்ந்தால்தான் நாம் ஒரு புதிய சுதந்திரத்தைப் பெற முடியும் என்கிறோம். இதனை நேற்றுப் புரிந்துகொள்ளாதவர்கள் இன்று புரிந்துகொண்டுவிட்டார்கள். இன்று எதிர்ப்பவர்கள் நாளைக்கு ஆதரித்தே தீரவேண்டும். எனவே அடிமை விலங்கொடித்து, தனியரசு பெற்று, விடுதலை விழாக் காண வாரீர்! வாரீர்!!

—கூடலரசன்.

ராஜா பால் பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்
சங்குப்பிள்ளை, 15, திண்டுக்கல்ரோடு, மதுரை.

— முன் பக்கத் தொடர்ச்சி —

பெற்றோர்க்குச் சொத்தில்லாதால் குழந்தை தம்மைப்
பெருஞ்சொத்தாய்ப் பேணிடுவார்! இல்லை யென்றால்
கற்றுவளர் காலமெலாம் தமது சொத்தாய்க்
கருதிடுவார் அரசியலார் மேலை நாட்டில்!
உற்றபெரும் புண்ணியத்தில் உறைந்தநாட்டில்
ஊராள்வோர் ஆட்சிக்கே செல்வம்காணார்!
பெற்றவரோ வழியறியார்! பிள்ளையெல்லாம்
பெருமானின் சொத்தென்று விட்டுவிட்டார்!

விளையும் செல்வம்:

உதைக்குங்கால் மகிழ்ச்சிதரும்! நெஞ்சத்தின் மேல்
உதைகொடுத்து முத்தத்தைப் பரிசாய்க் கொள்ளும்!
உச்சியினை மோந்ததுமே இன்பம் துள்ளும்!
பதைத்தழுது எதிர்ப்படக்கும் வீரனைத் தன்
பனிமல்கும் கண்ணாலே தனக் கடக்கும்!
பணிசெய்யக் கைகாட்டி வழி நடத்தும்!
கதைப் பொருளை முகக்குறிப்பால் விரைத்துரைக்கும்!
காவியத்தின் நயமுரைக்கும் இகழ்வி ரித்துக்
கனிதமிழின் சுவையூற்றிச் சிரித்திருக் கும்!
விதைத்ததிது தொல்லையெனச் சொல்லும் பிள்ளை
விதைத்ததவும் இன்பத்திற் கெல்லை இல்லை!
விளையுமொரு செல்வமது பிறிதும் இல்லை!

கண்கண்ட தெய்வம்

கண்காட்டி அச்சத்தைக் கூட்டும்! பின்னர்க்
கனிகின்ற கன்னத்தால் மகிழ்ச்சி யூட்டும்!
கருத்தெல்லாம் கையசைப்பில் காட்டும்! பேச்சில்
பண்காட்டித் துயர் வெல்லும்! தோளில் ஏறிப்
பணிசெய்து காவடியும் தூக்கச் சொல்லும்!
படைத்துணவு நாம்உண்ண அமைதி கொள்ளும்!!
விண்காட்டிப் பலதெய்வம் காட்டுவோர்க்கும்
விழைவூட்டி நெறிகாட்டித் தவமும் தந்து
'வேண்டுதலை' தான்வாங்கி வரங்கொடுக்கும்!
மண்காட்டும் பேரெல்லாம் நமக்குக் கூட்டும்
மக்களைப்போல் தெய்வமெந்த உலகும் இல்லை?
மகிழ்ச்சிதரும் பேருலகம் பிறிதும் இல்லை?

இவ்வளவு சிறப்புடைய மக்கள் தம்மை
எள்ளளவும் குறைவின்றிப் பெற்ற நண்பா!
அவ்வளவுக் கவ்வளவு செல்வம் தேடி
அவர்களை நீ அறிவு நிறைந்த மக்களாக்கு;
தெவ்வரென உள்ளிருப்போர் தமிழுக் கிங்கு
தீமைசெய நினையுங்கால் தடுத்தழித்தே
உய்வதற்கு வழிவகுப்பாய்! என்று சொல்லி
உணர்வூட்டி உணவருந்த அழைத்துச் சென்றேன்.

[இக்கவிதையை அரங்கேற்றியவர் திரு. தமிழண்ணல் பி. ஏ. அவர்கள். அடுத்த இதழில் திரு. நாரா நாச்சியப்பன் அவர்கள் அரங்கேற்றிய கவிதை வரும்]

ஆசிரியத் தோழமைக்கு.

ஐயா, 15-8-'59-ல் வெளிவந்த, தென்றல் இதழில் 'சிங்கத் தமிழனா, சிங்களத் தமிழன்' என்ற தலைப்புத் தந்து தாங்கள் தீட்டிய கவிதை கண்டு அகமும், மனமும் குளிராத தமிழ் மக்களை இன்று இலங்கையில் காணமுடியாது.

தாயகத்துத் தலைவர்களை அவர்கள் இலக்கியத் துறையைச் சேர்ந்தவராயினும் சரி, அரசியல் துறையைச் சேர்ந்தவராயினும் சரி-கௌரவிக்க சேய்நாட்டு மக்கள் என்றும் தவறினார் இல்லை.

ஆனால், இது காலம்வரை இது வெறும் ஒருபட்சக் காதலாகவே இருந்து வந்தது கண்டு சிங்கத் தமிழர் நாம் வருந்தினோம். ஆனால் கழகமும் கழகப் பத்திரிகைகளும் எம் தலைவர்களைக் கௌரவிப்பதன் மூலம் தமக்கு எம்பேரில் இருக்கும் காதலை வெளிப்படையாகவே காட்டுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். இதற்காகக் கழகத்தையும் தங்கள் ஏட்டையும் பாராட்டுகிறோம்.

மேற்படிக் கவிதையைத் தகுந்த ஒரு பாடகரைக் கொண்டு பாட வைத்து அதனை ஒலிப்பதிவு செய்து தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறார்கள், இலங்கைத் தமிழ் மக்கள். 'அண்ணா' என்ற சொல் திரையில் ஒலிக்காதா என்று கனவு கண்ட திராவிடத்து மக்கள் தம் கனவு நனவாகிவிட்டது குறித்து மகிழ்வதுபோல், அதுபற்றி நாமும் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் எம் கனவு நனவாவது எப்போது?

யாழ்ப்பாணம்
20-8-'59

பெற்றம்மா.

ஐயம் அகற்று!

கண்ணதாசன் பதில் தருகிறார்.

தே. செ. கிருட்டினமூர்த்தி, ஆம்பூர்.

திருக்குறட்பா ஒன்றினைப் பற்றி, சென்ற இதழில் தாங்கள் தந்த விடைக்குத் தெளிவான விடை கீழே தந்துள்ளேன்......

அடுத்த இதழில் வருகிறது.

★

சாந்தியன், கல்லாகுளம், மதுரை.

பாண்டிச்சேரித் தேர்தல்பற்றி ஒரு பத்தி எழுதுங்கள்!

எதிர்பார்த்த தோல்வி!

★

வென்சிலாஸ்பால், புரசை.

"பாண்டிச்சேரியில் மாண்டொழிந்த தி. மு. கவுக்கு பூவிருந்தவல்லியில் கருமாதி" செய்யப் போகிறார்களாமே, செங்கற்பட்டுக் காங்கிரசார்!

பிள்ளைகள் தகப்பனுக்குக் கருமாதி செய்வது இயற்கைதான்.

★

தமிழடியான், கரூர்.

தண்டமிழ் வண்ணக் கோவை
  தந்திடும் கண்ண தாச!
கண்டுளேன் நுமது தென்றல்!
  கவிநறுந் தேனை யுண்டேன்!
வண்டெனும் உருவெடுத்து
  வண்டமிழ்ச் சோலை புக்க(க்)
கொண்டுளேன் ஆசை! ஐயா
  கூறிடும் சிந்நாட்கள் தான்!

கண்படு நூல்கள் யாவும்
  கற்பவன் மேதை! நெஞ்சம்
பண்படு மதனால்! அஞ்சாப்
  பாவலன் ஆவான்! ஆயின்
புண்படு நூல்கள் நீக்கிப்
  பொறுப்புடன் கற்றல் வேண்டும்!
எண்படு பொருளை மீண்டும்
  எதிரொலி செய்தல் நன்றே!

★

ஆர். மாமாலை, மதுரை.

ஏடா கவிஞா! என்னடா துணிவு!
மூடா நீயும் முறையே கற்றியோ!

வாடா தம்பி! வாய்மொழி அழகே!
மூடன் எப்படி முறையே கற்பான்?
தேடாதடைந்த செல்வம், எங்கள்
தென்தமிழ் எனக்குத்தந்த
வெற்றியே
பாடும்திறனும் பதுங்காத் தன்மையும்
பீடுறுநடையும் பேறும், நெஞ்சில்
ஆடும்பொருளை வையினில் கூறும்
வாய்ப்பும்என்பதை மன்றினில் அறிக!

பூ. ஆ. சுந்தரன், பதுளை.

வறுமையில் மாண்டாள்
  அன்னை!
வாழ்க்கையை மறந்தான்
  தந்தை!
பொறுமையில் லாதான்; பிள்ளை
போய்க்கடல் நீரில் வீழ்ந்தான்!
சிறுமையில் பெண்ணாள்
  வாழ்க்கை
சிதைந்தனள்! இவ்வாறெங்கள்
திருவெலாம் அழிக்கும் ஏழ்மை
திருநாள் எந்நாள் ஐயா!

மும்முடி இழந்தோம்; வாழ்க்கை
  முறையெலாம் இழந்தோம்! அன்னை
தம்மரும் மக்கள் வாழத்
  தந்ததோர் திறமும் கெட்டோம்!
செம்மையில் லாதார் கையில்
  சிதைகிறோம்! கைப்பூட் டேற்கும்
பொம்மைகள் ஒழியும் நாளே!
  பொன்னகம் வாழும் நாளாம்!

★

பி. பாலசுப்ரமணியம், சேலம்.

கட்டபொம்மன் படத்தில் ஜெமினி கணேசனிடம் சிவாஜி கணேசன், "உன் மனைவி கர்ப்பமாயிருக்கிறுவென்று என்னிடத்தில் சொல்லவேயில்லையே" என்கிறார். அதற்கு ஜெமினி கணேசன் எனக்கே தெரியாது என்கிறார். இதுதான் தமிழர் பண்பா?

ஆமாம். இதுதான் தமிழர் பண்பு. தான் கர்ப்பமாக இருப்பதை கணவரிடம் சொல்ல நல்ல குலமங்கையர் வெட்கப்படுவர். வசனம் எழுதிய தோழர் சக்தி கிருட்டிணசாமி தமிழர் பண்பு பற்றி நன்ருகத் தெரிந்தவர்.

★

வி. மாதவன், நாகல்நகர், திண்டுக்கல்

தி. மு. க. புகுந்தவுடன் கலை, சந்தைக் கடையாகி விட்டதென்கிறீரே, டி. கே. சண்முகம்!

அவரும் நடிக்கிறேனென்று மரக்கடை வைத்துப் பார்த்தார். மக்கள் தங்களுக்கு மரங்கள் வேண்டாமென்று கூறி, சந்தைக் கடைப் பக்கம் திரும்பிவிட்டார்கள்.

கல்யாண பரிசு சரியா? கல்யாணப் பரிசு சரியா? ஏன்?

இலக்கணப்படி ஒற்றுவேண்டும். ஆனால் எட்டு எழுத்துக்கள் இருந்தால் "ராசி" இல்லையென்று ஒற்று விடப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஒற்றுப் போடப்பட்டிருந்தாலும் படம் இந்த அளவுக்குஓடும். திருநீலகண்டர், புதுமைப்பித்தன் போன்ற படங்களெல்லாம் எட்டெழுத்துக்களோடு அற்புதமாக ஓடியிருக்கின்றன.

வாழ்வும் தமிழும்

வாழ்க்கை இன்பமானது
காதல் செழுமையானது
திருமணம் தூய்மையானது!

மாடப்புருவின் காதலைக் கண்டேன்!
மான்களின் குடும்ப ஒற்றுமை கண்டேன்!
பாடும் குயில்களும் பிள்ளைபெற்றன!
படரும் கொடிகளும் வாழ்வையறிந்தன!
வெண்மதி வந்தது; அல்லி மலர்ந்தது!
வெங்கதிர் வந்தது; தாமரை பூத்தது!
மேகம் குவிந்தது; மாமயில் நடனம்!
மெல்லிசை வந்தது; கன்றுகள் மயக்கம்!
தொட்டாற் சுருங்கி—இப்படி ஒரு செடி!
பெண்மையின் நாணம்—அது தரும் பாடம்!
கவரிமாவினைக் கண்டேன்; படித்தேன்!
தமிழ்க்குல மங்கையின் மான உவமை!
மென்மை அனைத்தும் பெண்மைக் குவமை!
வன்மை யாவையும் ஆண்மைக் குவமை!
குறுக்குக் கோடுகள் பெருக்கல் தத்துவம்!
எதிர்மறைப் பாடல் இருகுரல் இசையாம்!
மோதும் இரண்டில் மூன்று பிறந்தது!
அகரத் தொடக்கம், தமிழின் துவக்கம்!
அதுதான் பிறப்பின் முதற்பெருந் தத்துவம்
கருவில் குழந்தை சுருண்டு கிடப்பதை
எழுதிப் பார்த்தால் 'அ'கரம் கிடைக்கும்!
உந்திச் சுழியே 'அ'வின் முதற்சுழி!
உலகம் தமிழனை முதலில் படைத்தது!
தமிழனே உலகில் தத்துவம் வகுத்தான்!
தத்துவத் தமிழர் தலைமுறை தந்தவன்
வீரமறவர் நாட்டு **வீரப்பன்!**
கண்ணகி ஆத்தாள் குலத்தில் வந்தவள்
கண்ணாத்தாள்! ஆம்; வணிகர் குலமகள்!
வீரமும் கற்பும் இணைந்தன ஒன்ருய்!
மீன்கொடி பறந்த பூமி வெற்றியூர்!
வெற்றி! வீரம்! கற்பு! சுற்றம்
யாவும் வாழிய! வாழிய நீடு!

— **கண்ணதாசன்.**

[வெற்றியூர் திரு. அ. நடராசன் அவர்கள் செல்வி **கண்ணாத்தாள்**, திரு. **வீரப்பன்** அவர்களை மணந்தகாலை, அளித்த வாழ்த்து.]

திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் விகாரி ஆண்டு ஆவணித் திங்கள் 14-ம் நாள் (30-8-59) ஞாயிற்றுக்கிழமை காலை 10-40-க்குமேல் 11 மணி அளவில் என் மகன் நடராசன் மகள் திருவளர்செல்வி **கண்ணாத்தாளுக்கும்** நாட்டரசன்கோட்டை உயர்திரு. வீர. சுப. லெ. லெட்சுமணன் அவர்கள் மகன் திருவளர் செல்வன் **வீரப்பனுக்கும்** எங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தங்கள் நல்வரவைப் பெரிதும் விரும்புகிறேன்.

வெற்றியூர்
17-8-'59

தங்கள் அன்புள்ள,
ஆத. அரு. ஆதப்பன்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

ஆ. நடராசன், ஆ. ராமநாதன், ஆ. வேலாயுதன்.

★★ தலைவரைத் தாக்கும் தொண்டர்கள்!
தொண்டரைத் தூற்றும் தலைவர்கள்!
கோட்டைக்குள் குத்து வெட்டு!
குடும்பத்திற்குள் பகையும் போரும்!
பாழாகிறது "பாரதம்"!
இரத்த ஆறுகிறது "இந்தியா"!

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

ஆட்சியின் நலன்களும் வசதிகளும் அந்த ஒரு கும்பலுக்கே பயன்படுத்தப்படுகின்றன.

இந்தச் சூழலில் நாங்கள்-சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள்-அமைச்சரவை எங்கள் நம்பிக்கையைப் பெற்றியங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

எனவே நாங்கள் இந்த முதலமைச்சரின் ஆட்சியை மறுக்கிறோம். நிலைமை மோசமானால், அதற்கு நாங்கள் பொறுப்பாகமாட்டோம்; நடவடிக்கையைக் காலத்தே எடுக்காத காங்கிரசின் தலைமையணிதான் பொறுப்பாகும்! என்ன உங்கள் முடிவு? எடுத்துரைப்பீர் விரைவில்" என்று கொதித்துக்கிளம்பியிருக்கின்றனர் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் 98 பேர்.

"எங்கே எழுந்தது இக்குரல்? ஒற்றுமையை போதிக்கும் நேருவின் இயக்கத்திலா இந்தக் கூச்சல்?" என்று விந்தைக்காளாகாதீர்! இது அவர்களிடை வாடிக்கையான நிகழ்ச்சி! ஆம்! ஆம்! பதவி வெறிகள் பல வழிகளில் உச்சக்கட்டத்திற்குச் செல்கின்றன.

தியாகிக்கும் புதுக் காங்கிரசுக்காரனுக்கும் சண்டை!

பணக்காரக் காங்கிரசுக்காரனுக்கும் ஏழைக் காங்கிரசுக்காரனுக்கும் சண்டை!

"அடித்த கொள்ளையில் பங்கு தரவில்லை. ஆதலால் அழித்துக் காட்டுகிறேன் பார் உன் ஆட்சியை!" என, பேரத்தில் ஏமாந்தோரின் கிளர்ச்சி வேறு!

தன்னிடமே பதவியை வைத்துக் கொண்டிருப்போனுக்கும், பதவிக்குக் கொட்டாவி விடுவோனுக்கும் சண்டை! இந்த அடிப்படையில் மட்டும் காங்கிரசுக் கோட்டைக்குள் பூசல் எழவில்லை!

"நீ ரெட்டி! நான் இராயன். ரெட்டிக்கே பாத்தியமா என்ன ஆட்சி? இராயனுக்குச் சிலநாள் தா ஆட்சியை!"

"நீ முதலி! நான் கோனான்! முதலிக்கு மட்டுமா ஆட்சிப்பட்டயம்? எனக்கும் அமைச்சர் பதவி தராவிட்டால் தொலைந்தாய் நீ!" எனத் தம் சட்டத்தின் நாதத்தை எழுப்பிக் குழப்பத்தை விளைவித்தோர் பலர். இவர்களும் இந்தப் புதுக் குழப்பத்திற்கு வித்தூன்றியிருக்கிறார்கள்.

மொத்தத்தில் நாடே குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறது. இதில் ஒருவகைக் குழப்பத்தின் விளைவுதான் இந்த அறிக்கை!

குழப்பக் காடாகக் கிடக்கும் உத்தரப் பிரதேசத்திலேதான் — நேருவின் சொந்த மாநிலத்திலேதான் இந்தக் கூச்சல் கிளம்பியிருக்கிறது. ஒற்றுமையை விளக்குபவர் வீட்டிலேதான், இத்துணை வெடிப்புக்களும் பிளவுகளும் வந்திருக்கின்றன! வேதனைப்படுகிறார் அந்த வேந்தர்! கண்ணீர் வடித்துக் கருகியுருகி அழைக்கிறார், அமைதியை! ஆனாலும் அமைதி வந்தபாடில்லை.

சரன்சிங் ஆச்சார்யா சுகல்கிசோர், மங்களா பிரசாத் முதலியோர் போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றனர், உத்தரப் பிரதேச முதலமைச்சர் சம்பூரணானந்தரை எதிர்த்து! "வயதில் முதிர்ந்தவர்; தன் வழிக்கு ஏற்றவர்; தக்கவர்; நல்லவர்; வல்லவர்!" என்றெல்லாம் எண்ணினார் பந்து; தன்னிடத்தில் தனக்குப்பின் அவரை அமர்த்திச் சென்றார். உயர்ந்த பதவிக்குத் தான் செல்கையில் தகுந்த ஒருவரை வைக்க வேண்டும் என்றெண்ணிய பந்தின் கண்ணில் பட்டவர்-நினைவில் நின்றவர், சம்பூரணானந்தர். அவரது நம்பிக்கைகள் வீணாகி விட்டன என்பதைத்தான் நடக்கும் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. அல்கு ராய் சாஸ்திரி என்பாரும் பிறரும் வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பியிருக்கின்றனர்.

உத்தரப் பிரதேசம் நேரு பிறந்த மாநிலம்!

ஒற்றுமையைப் போதித்த இயக்கம் காங்கிரசு!

நல்லன காண ஒரே வழி தியாக முத்திரைகளைத் தாங்குதலே என்பது காங்கிரசாரின் பேச்சு!

ஆனால்...

அல்குராய் சாஸ்திரியும் ஆச்சார்யா சுகல்கிசோரும், சரண் சிங்கும் மங்களா பிரசாத்தும் குற்றக் கணைகளைப் பொழிகின்றனர் ஆவேசப் பேச்சுக்களைப் பேசுகின்றனர்.

ஆக...

ஆலங்கோலம் கூத்தாடுகிறது; ஆட்சியின் இயக்கம் தடைபடுகிறது; மக்களின் நம்பிக்கை உடைபடுகிறது!

ஆம்...

பாரதம் எங்கும் சோதரர் போர் நடக்கிறது; பாரதமாதா கண்ணீர் வடிக்கிறாள். அதன் ஒரு காட்சியே உ. பி. கலவரம் அதை விரிய அறிவோம், அடுத்த வாரம்!

மா. பாண்டியன்

வாழ்க! வாழ்க!

விஜயா புரொடக்ஷன்ஸ் மானேஜிங் டைரக்டர் திரு. நாகிரெட்டி தமது புதல்வர் வேணுகோபாலனின் திருமணத்தைச் சென்னையில் மிகச் சிறப்பாக நடத்தினார். மணமகள் திருமதி பத்மாவதி விஜயா புரொடக்ஷன்ஸ் டைரக்டர் திரு ரமண ரெட்டி அவர்களின் புதல்வி ஆவார். இவர்களின் புதுவாழ்வு இனிய பல நலன்களை வழங்க வாழ்த்துகிறோம். வாழ்க! வாழ்க!

★



பெருமதிப்பிற்குரிய தமிழாசிரியர் திரு. கு. மதுரை (முதலியார்) அவர்களின் மூத்தமகன் திரு. ம. சந்திரசேகரன் அவர்கட்கும், திரு. இராமகிருட்டிணன் அவர்களின் செல்வி திருமதி கற்பகவல்லி அவர்கட்கும் கடந்த 17-8-'59 அன்று சென்னையில் திருமணம் நடைபெற்றது. எண்ணிலா உறவினர்களும் பல்லாயிரம் இயக்கத் தோழர்களும் திரண்ட இத்திருமணத்தை மதிப்பிற்குரிய சிறுவை. திரு. மோகனசுந்தரம் அவர்கள் தலைமையேற்று நடத்திவைத்தார்கள். திருமதி தாமரைக்கண்ணி அம்மையார். திரு. தாமோதரனார். திரு. என். டி. அரசு, மா. பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரைத்த பின்னர், ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் மணமக்களின் வாழ்க்கை வளம்பெறுவதற்கான வழிகள் பலவற்றை விளக்கிப் பேசி, மணமக்களை வாழ்த்தினார்கள்.

திருவாளர்கள் நடேச (நாயக்கர்), நெ. து. சுந்தரவடிவேலு, டாக்டர் தேவசேனாபதி, செ. மெ. பழனியப்பர், பெரியசாமி தூரன் முதலிய பலர் மணவிழாவிற்கு வந்து மணமக்களை வாழ்த்தினர். திரு. மயிலை. சிவமுத்து முதலியோர் வாழ்த்துச் செய்தியனுப்பியிருந்தனர்.

மேலேயுள்ள படம் மணமக்களையும், கீழேயுள்ள படம் ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் வாழ்த்துவதையும் காட்டுகின்றன. மணமக்கள் நலம் பல பெற்று நீடு வாழ வாழ்த்துகிறோம்! வாழ்க! வாழ்க!



ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு